## கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் மோட்டார் வாகன தீர்ப்பாயம், பெரியகுளம்.

ம.சா. 2 நாள்: 15 .09.2025

வழக்கு எண் **MCOP No.160 /2023**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | விஜயகுமார் | ஊர் | : | பிரகதாம்மாள்புரம் |
| கணவர்/தந்தை பெயர் | : | ராஜேந்திரன் | தாலுகா | : | குளத்தூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம், |
| தொழில் | : | கிளை மேலாளர் ஸ்ரீ ராம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் | வயது | : | 38 /2025 |

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 1908 ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு கட்டளை XVIII விதி 4 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

**மனுதாரர் தரப்பில் 2 ஆம் சாட்சியின் முதல் விசாரணை**

நான் நீதிமன்ற அழைப்பாணை பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் காஜாமைதீன், செந்தில்குமார்,பாண்டீஸ்வரன், ரமேஷ் ஆகிய நாங்கள் ஐந்து பேரும், 12.07.2019 ம் தேதி இரவு குற்றாலத்திற்கு குளிக்க சென்றோம், குற்றால அருவியில் தண்ணீர் குறைவாக இருந்ததால் 13.07.2019 ம் காலை 07.30 மணியளவில், பாலஅருவியில் தண்ணீர் விழுந்ததால் அங்கு சென்றோம். கொல்லம் – திருமங்கலம் சாலையில் கட்டளை குடியிருப்பு என்ற பகுதியில் வந்தபோது எங்களுக்கு எதிரே டாடா 1109 என்ற லோடு வண்டி வேகமாக வந்து நாங்கள் என்ற TN55 AU4744 என்ற ஹூண்டாய் I10 என்ற வாகனத்தில் மீது மோதி விபத்து ஏற்பட்டது. எங்கள் வண்டியை பாண்டீஸ்வரன் ஓட்டினார். அவருக்கு அருகியில் காஜாமைதீன் அமர்ந்து இருந்தார். டிரைவர் சீட்டிற்கு பின்னால் செந்தில்குமாரும் அவருக்கு அடுத்து ரமேஷ் என்பவரும் அதற்கு அடுத்து நானும் அமர்ந்து

இருந்தோம், எங்கள் காரில் வலது பக்கம் பகுதி முழுவதும் சேதம் அடைந்து விட்டது. விபத்து ஏற்பட்ட உடன் எனக்கு சுயநினைவு இல்லை. ஆம்புலன்ஸ் வந்து முதல் உதவி செய்த பின்னர் எனக்கு நினைவு வந்தது. சம்பவ இடத்திலேயே ரமேஷ் என்பவரும் பாண்டீஸ்வரனும் இறந்து விட்டார்கள். நானும் செந்தில்குமாரும் அதே ஆம்பலன்ஸ் ஏறி தென்காசி அரசு மருத்துவமனைக்கு வந்தோம். எனக்கு தனியாக சிகிச்சை வழங்கப்பட்டது. சிகிச்சையில் இருந்த செந்தில்குமார் என்பவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். காஜாமைதீனை அவரது உறவினர்கள் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று விட்டார்கள். விபத்து சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீசாரிடம் நடந்த விபரத்தை சொன்னேன். விபத்திற்கு சரக்கு வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுனர் தான் காரணம்.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR

Digitally signed by SANKAR
Date: 2025.09.15 10:54:05 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**பெரியகுளம்.**